**Media:** Tamil Murasu
**Date:** 7 April 2025
**Page:** 2

# மரின் பரேடில் எல்லாருக்கும் பலனளிக்கும் திட்டங்கள்



கம்போங் உபி சமூக மன்றத்தில் நடைபெற்ற எஸ்ஜி 60 நிகழ்ச்சியில் பிரதமர் லாரன்ஸ் வோங்குடன் அமைச்சர்கள், எம்.பி.க்கள்.
**படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

**லாவண்யா வீரராகவன்**

மரின் பரேடில் மூத்தோர், நோய்வாய்ப்பட்டோர், உடற்குறையுள்ளோர் உள்ளிட்டோரின் பராமரிப்பாளர்களுக்கு ஆதரவளிக்கவும் இளையர்களைப் பணிக்குத் தயார்ப்படுத்தும் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுத்தரவும் ஏதுவாக புதிய திட்டங்கள் அறிமுகம் கண்டுள்ளன.

கம்போங் உபி சமூக மன்றத்தில் நடைபெற்ற எஸ்ஜி 60 தொடர்பான விழாவில் இவ்விரு திட்டங்களும் அறிமுகம் செய்யப்பட்டன.

இவ்விழாவில் பிரதமர் லாரன்ஸ் வோங் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். அவருடன் அத்தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர்களான மனிதவள அமைச்சர் டான் சீ லெங், கலாசார, சமூக, இளையர் துறை அமைச்சர் எட்வின் டோங், ஃபஹ்மி அலிமான் (கேலாங் செராய்), லிம் பியாவ் சுவான் (மவுண்ட்பேட்டன்), டின் பெய் லிங் (மெக்பர்சன்), நாடாளுமன்ற நாயகர் சியா கியன் பெங் ஆகியோரும் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் வோங், மரின் பரேட் தாம் வளர்ந்த வட்டாரம் என்றும் காலப்போக்கில் இது பெருமாற்றங்களைச் சந்தித்தது என்றும் குறிப்பிட்டார்.

விலைவாசி உயர்வை எதிர்கொள்ள அரசாங்கம் பல்வேறு திட்டங்களை அறிவித்துள்ளதையும் அவர் சுட்டினார்.

உலகம் சவால்களைச் சந்தித்து வருவதாகக் குறிப்பிட்ட அவர், "கடந்த 60 ஆண்டுகளாக கொவிட்-19 பெருந்தொற்று உள்ளிட்ட சவால்களை எதிர்கொண்டுள்ளோம். ஒன்றிணைந்து நாம் சந்தித்தவற்றிலிருந்து வலிமை பெற்று மேலும் முன்னோக்கிச் செல்வோம்," என்றார்.

மேற்கண்ட திட்டங்கள் குறித்து ஏப்ரல் 3ஆம் தேதி நடைபெற்ற கலந்துரையாடலின்போது விரிவாக விளக்கப்பட்டது.

ரொக்கம், போக்குவரத்து, ஓய்வுக்கால உதவி ஆகியவற்றுக்காக $1,600 வரை வழங்கப்படும். ஏறத்தாழ 2,800 குடும்பங்களுக்கு இத்திட்டம் ஆதரவளிக்கும்.

குடும்பத்தினரின் எண்ணிக்கையையும் வருமானத்தையும் பொறுத்து $700 வரை ரொக்கமும் மருத்துவமனைப் போக்குவரத்துச் செலவுகளுக்கு ஆதரவளிக்க $300 வரை கிராப் பற்றுச்சீட்டுகளும் $600 வரை ஒய்வு நிதியும் வழங்கப்படவுள்ளன.

lveer@sph.com.sg

Source: Tamil Murasu @SPH Media Limited. Permission required for reproduction.